இலங்கை சீமெந்துக் கூட்டுதாபனம் - 2021

-------------------------------------------------------

1. நிதிக்கூற்றுக்கள்

----------------------

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

-------------------------------------------

இலங்கை சீமெந்துக் கூட்டுதாபனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து சபையின் 2021 செப்தம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

-----------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

----------------------------------------------------------------------------------------------------

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது

கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவிலும் மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது கூட்டுத்தாபனத்தில் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க கூட்டுத்தாபனம் செயற்பட்டுள்ளதாக,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்ப்படுத்துதல், தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல், மற்றும் சொத்துக்களுக்கான கணக்களிப்பு பொறுப்பினைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல் பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்காக கணக்களிப்பு பொறுப்பினை பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது இணக்கம் செய்தல், மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்படுத்தலினை பெற்றுக்கொள்வதற்குப் போதியளவு “சிறப்பாகத் திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தினால் பேணுதல் அத்தியவசியமானதாகும்.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| இலங்கைக் கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனம், பொறி | மதிப்பீட்டு நடவடிக்கை யை ஆரம்பிப்பதற்கு | முழுமையாகப் பெறுமானத் தேய்வு |

| | | |
|---|---|---|
| மற்றும் உபகரண விடயங்களின் விளைதிறனான ஆயுட்காலத்தை மீளாய்வு செய்யாததன் காரணமாக முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டுள்ளது. எனினும் தற்பொழுது பயன்படுத்தப்படுகின்ற ரூபா 4,463,964 கிரயமான 02 வாகனங்கள் வரலாற்றுக் கிரயத்தில் கணக்குகளில் காட்டப்பட்டிருந்ததுடன் சொத்துக்களின் ஆயுட்காலம் தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்ட தவறினை இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் பிரகாரம் மீள்மதிப்புச் செய்து சரியான இயலளவுப் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான முயற்சிகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செய்யப்பட்டுள்ள சொத்துக்களை மீள்மதிப்புச் செய்து இயலளவுப் பெறுமதிக்கு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

-----------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | ………………………………….. | …………………… | ………………….. |
| (அ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிலிருந்து தோன்றிய காசுப்பாய்ச்சலினை கணக்கீடு செய்யும் போது ஆண்டின் போது செலுத்தப்படாதுள்ள ரூபா 10,724,585 தொகையான வருமான வரிச் செலவு ஆண்டின் கொடுப்பனவாக பதியப்பட்டிருந்ததுடன் வியாபார மற்றும் ஏனைய பெறுவனவுகள் அதிகரித்தல் ரூபா 20,202,989 ஆக இருந்த போதிலும் ரூபா 5,727,328 ஆகக் காட்டப்பட்டிருந்தது. | இப்பிழையினைச் சரிசெய்து 2022 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் சமர்ப்பிக்கப்படும். | பதிலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 33,779,005 தொகையான மொத்த கடன்படட்டோர் மீதியில் ரூபா 1,688,950 தொகைக்கு ஐயக்கடனுக்கான ஏற்பாடு மாத்திரம் செய்யப்பட்டிருந்தும் ரூபா 25,925,739 தொகையான இனங்காண முடியாத கடன்பட்டோர் மீதிக்காக எதுவித ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கவில்லை. | கடன்பட்டோர்களுக்கு மீதிளை உறுதிப்படுத்துவதற்காக கடிதம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தும் அதற்காக பதில் கடிதம் அனுப்பிவைக்கப்படாததுடன் இது சம்பந்தமாக பணிப்பளர்கள் சபையின் தீர்மானத்தைப் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அறவீடு செய்தல் ஐயமாகவுள்ள மீதிகளுக்காக போதியளவு ஒதுக்கீடுகள் செய்யப்படுதல் வேண்டும். |
| (இ) | ரூபா 238,256 தொகையான இறுதி இருப்பு மற்றும் ரூபா 807,440,987 | இவ்வாறான மீளாய்வினை மேற்கொள்வதற்காக அதிக | சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணங்களின் |

| | | | |
|---|---|---|---|
| | தொகையான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் சம்பந்தமாக வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. 25,750 கன மீற்றர் அளவான சுண்ணக்கல் இருப்பின் பெறுமதி கணிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்காததுடன் இது சம்பந்தமாக வருடாந்த மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | செலவு செய்யவேண்டி ஏற்படுவதுடன் அவ்வாறான பணத்தை செலவு செய்வதற்கு போதியளவு பணம் கூட்டுத்தாபனத்திடம் இல்லை. | பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கூட்டுத்தாபனத்தின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்குள் உள்ளடக்கப்பட்ட 3 வகையான சொத்துக்கள் தொடர்பாக கணக்கீடு செய்யப்பட்டுள்ள மொத்தப் பெறுமதி ரூபா 10,113,706 ஆக இருந்த போதிலும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் அச்சொத்துக்களின் மொத்தப் பெறுமதி ரூபா 6,518,682 ஆக இருந்ததனால் ரூபா 3,595,024 வித்தியாசம் காணப்பட்டது. | வித்தியாசத்திற்கான காரணமானது தகவல்களை தேடி கண்டு பிடிக்கமுடியாத சொத்துக்களின் பெறுமதியாகும். | சொத்துக்கள் பதிவேட்டினை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

1.5.4 ஒன்றிணைத்தல்
-----------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ……………………………….. | …………………… | ………………….. |
| கூட்டுத்தாபனத்தினால் இலங்கை சீமந்துக் கம்பனியில் ரூபா 1,083,618,910 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க கூட்டுத்தாபனத்தின் துணைக்கம்பனியான இலங்கை சீமெந்துக் கம்பனியின் பங்கு மூலதனத்தில் 62.45 சதவீதம் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான போதிலும் கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டிற்காகவும் திரண்ட நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை சீமெந்துக் கம்பனி 2016 ஆம் ஆண்டின் பின்னர் கூட்டுத்தாபனத்திற்கு கணக்கு வழங்கப்பட்டிருக்காததுடன் கலைத்தல் நடவடிக்கை சம்பந்தமாக கைத்தொழில் அமைச்சினால் எங்களுக்கு 2022–05-26 ஆந் திகதிய MI/RST/09/06/05 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தப்பட்டது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் திரண்ட நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

1.5.5 கணக்காய்விற்கு எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| விடயம் | தொகை | வழங்கப்படாத கண்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| …………… | ……… ரூபா | ……………….. | ……………….. | ………….. |
| கடன்பட்டோர் | 7,853,266 | மீதிகளின் உறுதிப்படுத்தல் | மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக கடிதம் அனுப்பப்பட்டிருந்தும் அதற்காக மீண்டும் பதில் கடிதம் அனுப்பப்படவில்லை. | மீதிகளின் உறுதிப்படுத்தல் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |
| செலுத்த வேண்டிய மீதிகள் | 24,518,240 | மீதிகளின் உறுதிப்படுத்தல் | மீதிகளில் தனித்தனியாக இனங்காண முடியாத மீதிகள் அதிக அளவில் உள்ளதுடன் இனங்காண முடியாத மீதிகளை பகுதி பகுதியாக தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | செலுத்த வேண்டிய செலவுகளின் சரியான தன்மையை தேடிப்பார்த்து செலுத்தி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

1.6 பெறவேண்டிய கணக்குகள்

1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கடன் அடிப்படையில் சீமெந்தினை விற்பனை செய்வதன் காரணமாக கடன் பணத்தை மீளச்செலுத்தாமை மற்றும் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டத்தினை கொடுப்பனவு செய்யத் தவறியதன் காரணமாக 2003, 2011 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது வெளித்தரப்பினர்களுக்கு தாக்கல் செய்யப்பட்ட 12 வழக்குகள் தொடர்பாக ரூபா 14,316,638 தொகையான மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் பட்டோர் மீதியை தீர்த்து வைப்பது சம்பந்தமாக கணக்குகள் பிரிவிற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தும் எது வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன்பட்டோர் மீதியை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| | .............................. | ........................ | ........................... | ...................... |
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை மற்றும் நி.பி 371(2) | ஏதாவது விசேட செயற்பாடுகளுக்காக பதவிநிலை தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் ஒரு சந்தப்பத்தின் போது ரூபா 100,000 உச்ச அளவு வரை குறித்த செயலுக்கான உப கட்டுநிதியை வழங்குவதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு முடியுமாக இருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தரினாலேயே 8 சந்தர்ப்பங்களின் போது ரூபா 660,000 தொகையான குறித்த செயலுக்கான உப கட்டுநிதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலை வளவில பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளமுடியாத பொருட்களை நீக்கி சுத்தம் செய்வதற்காக அடிக்கடி காங்கேசன்துறையை நோக்கி பயணம் செய்வதற்கு தேவையான செலவுகளுக்காக இப்பணம் பெற்றுக்கொள்ளப்பட்டது. | சுற்றிக்கை மற்றும் நிதிபிரமாணங்களுக்கு இணங்க முற்பணங்களை வழங்குதல் வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 135 | கணக்கீட்டு உத்தியோகத்தர்களால் தமது செயற்பாட்டை பொதுவாக அல்லது ஒவ்வொரு சொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக கூட்டுத்தாபனத்தின் அமைப்பு கட்டமைப்பின் பிரகாரம் அதிகாரத்தை ஒப்படைத்தல் இடம் பெறுதல் வேண்டும். எனினும் கூட்டுத்தாபனத்தினால் 2021 ஆம் ஆண்டிற்காக அதிகாரத்தை | அதிகாரத்தை ஒப்படைப்பதற்கு போதியளவில் பதவி வகிக்கும் ஊழியர்கள் இல்லை. | தற்பொழுது இருக்கின்ற ஊழியர்களுக்காக அதிகாரத்தை ஒப்படைத்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

ஒப்படைத்தல் இடம் பெற்றிருக்கவில்லை.

2 நிதி மீளாய்வு

----------------

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 44,642,491 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 40,718,566 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 3,923,925 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு குத்தகை வாடகை வருமானம் அதிகரித்தல் மற்றும் நிதிச் செலவுகள் குறைவடைதல் பிரதான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு மீளாய்வு

--------------------------------------------------

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

---------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | ……………………….. | …………………… | ………………….. |
| (அ) | 2021 ஆம் ஆண்டின் போது வரிக்கு முன்னைய மொத்த மிகை ரூபா 44,642,491 பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே ஆண்டின் போது ரூபா 58,000,000 பணம் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டிற்கான வருமானவரியாக ரூபா 6,709,944 செலுத்த வெண்டிய போதிலும் 2022 ஏப்ரல் வரை அந்த வருமானவரிப் பணம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. | வரிப்பணத்தை 2022 யூன் மாதத்திற்குள் செலுத்தி பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நியமிக்கப்பட்ட காலத்திற்குள் வரிப் பணத்தை செலுத்த வேண்டும். |
| (ஆ) | கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காங்கேசன்துறையில் அமைந்துள்ள இரண்டு எண்ணைத் தாங்கிகள் மற்றும் குழாய் முறைமைகள், இலங்கை பெற்றோலிய இருப்புக் களஞ்சிய முனையத்தை அரசாங்க கம்பனிக்கு எழுத்துமூல உடன்படிக்கை செய்து கொள்ளாது வழங்கப்பட்டிருந்ததனால் 2010 இலிருந்து 2021 திசெம்பர் 31 வரை இதற்கான குத்தகை | இச்சிக்கலைத் தீர்த்து வைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் நாட்டில் காணப்படுகின்ற நிகழ்கால நிலைமையின் அடிப்படையில் இப்பணத்தை வேண்டுதல் நடைமுறையில் இச்சந்தர்ப்பத்தில் செய்யமுடியாத நிலைமை உருவாகியுள்ளது. | இந்நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாடகை வருமானமாகிய ரூபா 184,680,000 பணத்தை அறவீடு செய்வதற்கு இன்றுவரை கூட்டுத்தாபனத்திற்கு முடியாதிருந்தது. | | |
| (இ) | கூட்டுத்தாபனத்திற்கும் புத்தளம் சீமெந்துக் கம்பனி லிமிடட் அல்லது நிகழ்கால சியெம் சிடி சீமெந்து லங்கா லிமிடட்டிற்குமிடையே 1996 ஆகஸ்ட் 23 ஆந் திகதி கையொப்பமிடப்பட்ட 495 ஆம் இலக்க உடன்படிக்கையின் மூலம் அருவக்காடு சுண்ணாம்புக் கல்லுடனான காணியை வருடாந்தம் நிரந்தரக் குத்ததையின் அடிப்படையில் 50 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் 2019 நவம்பர் 07 ஆந் திகதி கையொப்பமிடப்பட்ட 268 ஆம் இலக்க மேலதிக குத்தகை உடன்படிக்கையின் மூலம் பன்னிரண்டு சதவீத குத்தகை அதிகரிப்பு சதவீதத்தின் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டிலிருந்து குத்தகை வருமானமானது அமெரிக்க டொலர் 319,118 ஆக அதிகரிக்கப்பட்டிருந்தது.<br>எனினும் 1993 இலிருந்து 2018 வரை முதலாவது உடன்படிக்கையினால் இழக்கப்பட்ட வருடாந்த குத்தகையை பெற்றுக்கொள்வது தொடர்பான தீர்மானத்திற்கு வருவதற்கு இன்று வரை கூட்டுத்தாபனத்திற்கு முடியாதிருந்ததுடன் மேலதிக குத்தகை உடன்படிக்கைக்காக சட்டமா அதிபரின் அங்கீகாரமானது இந்த அறிக்கைத் திகதிவரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக வரிசை அமைச்சிற்கு தெரியப்படுத்தியதன் பின்னர் இடம்பெற்றுள்ள நிதி ஒழுங்கீனங்கள் தொடர்பாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்து அந்த முறைப்பாடு விசாரிக்கப்பட்டு வருகின்றது எனவும் விசாரணைகள் தாமதமடைவது தொடர்பாக பொலிஸ்மா அதிபரை சந்தித்துள்ளதாகவும் | உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு முன்னர் சட்டமா அதிபர் மற்றும் வரிசை அமைச்சின் ஆலோசனையை பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் உடன்படிக்கையில் கையொப்பமிடுதல் வேண்டும். |
| (ஈ) | ரூபா 1,200,000 பெறுமதியான காலி உணவடுவ கெஸ்பேபான காணியானது ஹபராதுவ சுனாமியால் பாதிக்கப்பட்ட | 2021 மார்ச் மாதத்தின் போது கூட்டுத்தாபனத்தின் சட்டத்தரணிக்கு பெரகுளாஸ் அனுப்பி இழப்பீட்டினைப் | கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கவேண்டிய இழப்பீட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு |

| | | |
|---|---|---|
| மக்களுக்காக அறுபது வீடுகளை நிர்மாணிப்பதற்காக ஹபராதுவ பிரதேச செயலாளரினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அது சம்பந்தமாக எதுவித பணத்தையும் பெற்றுக்கொள்வதற்கு கூட்டுத்தாபனத்திற்கு இன்றுவரை முடியாதிருந்தது. | பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 1957 இன் 49 ஆம் இலக்க கைத்தொழில் கூட்டுத்தபாபன அதிகாரச் சட்டத்தின் மூலம் தேற்றுவிக்கப்பட்டுள்ள இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் துார நோக்கானது இலங்கையில் சீமெந்துக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக வழிகாட்டுதல் மற்றும் தலைமைத்துவத்தை வழங்குவதுடன் செயற்பணியாக நாட்டின் தேவைப்பாட்டினை அடைந்துகொள்வதற்காக தரமான சீமெந்து சார்ந்த உற்பத்திகளை போதியளவில் வழங்குவதனை உறுதிப்படுத்தலாகும். எனினும் நிகழ்காலத்தில் கூட்டுத்தாபனத்தினால் சீமெந்து அல்லது சீமெந்து சார்ந்த எதுவித உற்பத்திகளும் இடம் பெறவில்லை. கூட்டுத்தாபனத்தின் வருமான மூலங்களானவை கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 5,164 ஏக்கர் பரப்பளவான சுண்ணக்கல் வைப்பினை குத்தகைக்கு வழங்குதல், பாலாவியில் அமைந்துள்ள 12 ஏக்கர் 3 ரூட் 30 பேச்சஸ் அளவான காணியை குத்தகைக்கு வழங்குதல் மற்றும் கொள்ளுப்பிடியில் அமைந்துள்ள 89.07 பேச்சர்ஸ் அளவான காணியை வாகன தரிப்பிடத்தினை நடாத்தி வருமானம் உழைத்தல் என்பன மாத்திரமாகும். 2021 ஆம் ஆண்டில் அந்த வருமானம் ரூபா | இலங்கை சீமெந்துக் கூட்டுத்தபனத்திற்குச் சொந்தமான 03 தொழிற்சாலைகள் காணப்பட்டதுடன் 1993 ஆம் ஆண்டின் போது ருகுணு மற்றும் புத்தளம் சீமெந்து தொழிற்சாலைகளை தனியார் மயப்படுத்தி காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை 1990 ஆம் ஆண்டின் போது அப்போது நிலவிய யுத்த நிலைமயின் காரணமாக முழுமையாக செயலிழந்தும் அடிக்கடி சீமெந்து சார்ந்த உற்பத்தி நடவடிக்கைகள் மற்றும் சீமெந்தினை இறக்குமதி செய்து விற்பனை செய்யும் நடவடிக்கைகளிலும் நட்டம் ஏற்படல் மற்றும் சீமெந்து தொழிற்சாலையின் மேம்பாட்டிற்காக பொதியிடல் தொழிற்சாலையை மீண்டும் ஸ்தாபிப்பதற்குத் தேவையான செயற்பாடுகளை புதிய முகாமைத்துவத்தின் கீழ் மேற்கொள்ளுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டுள்ளன. தொடக்க மூலதனம் போதாமையின் காரணமாக அதேபோல உலக சந்தையில் சீமெந்தின் விலை அதிகரித்தல், கப்பல் | கூட்டுத்தாபனத்தை தோற்றுவித்த தொடக்க குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் அதேபோல கூட்டத்தாபனத்திற்குச் சொந்தமான இயற்கை வளங்களிலிருந்து உச்ச அளவான பயன்பாட்டை பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 65,256,215 ஆக இருந்தது. எனினும் கூட்டுத்தாபனத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள 13 உத்தியோகத்தர்களுக்காக மேற்கூறிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக சம்பளங்கள் மற்றும் படிகளை உள்ளடக்கிய நிருவாகச் செலவுகளாக ரூபா 19,983,648 தொகை வருடாந்தம் செலவு செய்யப்படுகின்றது. அச்செலவானது மொத்த குத்தகை வருமானத்தில் 31 சதவீதம் அளவாக இருந்தது. | கட்டணங்கள் அதிகரித்தல், தீவிரமாக ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைதல் என்பவற்றின் காரணமாக இச்செயற்திட்டங்களை முன்கொண்டு செல்லுதல் கூட்டுத்தாபனத்திற்கு நட்டத்தை ஏற்படுத்தக்கூடியது என்ற விடயத்தை கருத்தில் கொண்டு மீண்டும் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்த்து தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.. | |
| (ஆ) | இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 89.07 பேச்சஸ் அளவிலான கொள்ளுபிடியில் அமைந்துள்ள காணி 2008 ஆம் ஆண்டின் போது இலங்கை வங்கிக்கு அடமானம் வைக்கப்பட்டு பெற்றுக்கொள்ளப்படட கடன் தொகை 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 97,700,000 தொகைக்கு மீள்கட்டமைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இன்னும் செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 58,700,000 ஆகும். பெற்றுக்கொள்ளப்பட்ட இக்கடன் பணத்திற்காக 2021 ஆம் ஆண்டில் ரூபா 5,511,774 வட்டி செலுத்தப்பட்டிருந்தும் அக்காணியை குத்தகைக்கு வழங்கியதன் மூலம் ஆண்டிற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட குத்தகை வருமானம் ரூபா 4,893,331 மாத்திரமாக இருந்தது. ரூபா 735 மில்லியன் பெறுமதியான மிகவும் உயர்ந்த வணிகப் பெறுமதியைக் கொண்ட இக்காணி 2021 செப்தம்பர் 29 ஆந் திகதி பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் கலப்பு முதலீட்டு செயற்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கான பெறுகை நடவடிகையானது இவ்வறிக்கைத் திகதி வரை முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க இந்த ஆதனத்தை ஆக்கபூர்வமான முதலீட்டிற்காக ஈடுபடுத்துவதற்கு முடியாதிருந்தது. | இக்காணியானது உயர்ந்த வணிகப் பெறுமதியுள்ள காணியாவதுடன் கலப்பு முதலீட்டினை ஒரு ஆக்கபூர்வமான செயற்திட்டமாக அமுல்ப்படுத்துதல் நகர அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் அங்கீகாரத்துடன் செய்யப்படவேண்டியதுடன் பொருத்தமான ஒரு முதலீட்டாளரினை தேடிக் கண்டுபிடிக்கும வரை நிலத்தை துப்பரவாக வைத்திருத்தல் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் செய்யப்படவேண்டியதனால் 03 மாத குறுகிய கால எல்லைக்கு பல்வேறு நிறுவனங்களுக்கு வாகனங்களை நிறுத்திவைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன் அதன்மூலம் கூட்டுத்தாபனத்திற்கு வருமானமும் கிடைத்து வருகின்றது.தற்காலிகமாக<br><br>வாகனங்களை நிறுத்திவைப்பதற்கு வழங்கியமையால் உழைத்த வருமானத்துடன் வங்கி கடன் வட்டியை ஒப்பீடு செய்வதன் மூலம் போதியளவு தகவலை பெற்றுக்கொள்ளமுடியாதிருந்தது. | கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஆதனத்தை ஆக்கபூர்வமான முதலீடுகளுக்காக ஈடுபடுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | உயர்ந்த பெறுமதி கொண்ட கனரக கனியப் பொருட்களுடனான அருவக்காடு சுண்ணக்கல் வைப்பினைக் கொண்ட காணியின் மேல் மண் தட்டு மற்றும் அகழ்தலுக்காக இலங்கை கனிய மணல் கம்பனியுடனான ஒரு கூட்டு செயற்திட்டத்தினை 2021 இலிருந்து 2025 வரையான காலப்பகுதிக்குள் ஆரம்பிப்பதற்கும் அதற்காக உரிய தரப்பினர்களுடன் உடன்படிக்கையை தயாரித்தல் 2020 யூனிலிருந்து 2020 திசெம்பர் வரையான ½ ஆண்டுகள் காலத்தினுள் மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் இந்த அறிக்கைத் திகதி வரை அச்செயற்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது. | சுற்றாடல் அமைச்சு செயலாளரின் 2022-02-07 ஆந்திகதிய கடிதத்தில் இலங்கை கனியவள கூட்டுததாபனத்தின் பொது முகாமையாளர் அருவக்காட்டில் அமைந்துள்ள கனிய மணலுடனான காணி தொடர்ந்தும் அவசியமற்றது என தெரியப்படுத்தியுள்ளார் எனக் குறிப்பிட்டிருந்த போதிலும் அது தொடர்பாக கூட்டுத்தாபனத்திற்கு தெரியப்படுத்தியிருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான இயற்கை வளங்களிலிருந்து உச்ச அளவு பயன்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு முடியுமான வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டியதுடன் செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்காக ஏனைய கனிய வளம் சார்ந்த நிறுவனங்கள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். |
| (ஈ) | நாட்டில் நிலவிய யுத்தத்தின் காரணமாக உற்பத்தி நடவடிக்கைகள் நிறுத்திவைக்கப்பட்டிருந்த காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் உள்ள பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத பொருட்களை அகற்றி தொழிற்சாலை வளவை துப்பரவாக வத்துக்கொள்வதற்கு அமைப/21/0175/320/004 ஆம் இலக்க 2021 பெப்ரவரி 16 ஆந் திகதிய அமைச்சரவை பத்திரத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதற்கு இணைவாக PFD/PMD/01/CM/2021/041 ஆம் இலக்க 2021 பெப்ரவரி 08 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் தொழிற்சாலையின் உடைந்த இரும்புகள் மற்றும் உலோகங்கள் தொடர்பாக விடய ரீதியான பட்டியல் தயாரிக்கப்பட்டு அகற்றப்படக்கூடிய கட்டிடங்களின் மாதிரிகள், இயந்திரங்கள் மற்றும் உடைந்த உலோகங்களின் பெறுமதியை தீர்மானிப்பதற்காக ஒரு தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழுவினை | அமைச்சரவைத் தீரானத்தின் பிரகாரம் நியமிக்கப்பட்ட குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டதுடன் தொழிற்சாலை வளவில் காணப்பட்ட இயந்திரங்கள் மற்றும் உடைந்த இரும்புகள தொடர்பாக தயாரிக்கப்பட்ட அறிக்கை அதேபோல கட்டி கட்டடங்களுக்கான பெறியியலாளர் அறிக்கையும் அதற்குள் உள்ளன. அதன் கேள்வி நடைமுறையை அமுல்ப்படுத்துவதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் ஒரு அங்கத்தவராக நிறுவனத்தை பிரதிநிதித்துவப்படுத்தி ஒரு உத்தியோகத்தரை நியமித்து அனுப்புமாறு வரிசை அமைச்சின் மூலம் தெரியப்படுத்தப்பட்டதற்கு இணங்க தலைவரின் பெயர் 2022-04-29 ஆந் திகதி பணிப்பாளர்கள் சபையின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஆதனங்கள் ஆக்கபூர்வமான முதலீட்டிற்காக ஈடுபடுத்துதல் வேண்டும். |

நியமிப்பதற்கு

தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் அச்செச்செயற்பாடு இன்றுவரை பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. யுத்தம் முடிவடைந்து 13 ஆண்டுகள் கடந்திருந்தும் தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்து கூட்டுத்தாபனத்திற்குச்

சொந்தமான வளங்களிலிருந்து உச்ச அளவு பயன்பாட்டினைப் பெற்று உள்நாட்டு பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்வதற்கு இன்றுவரை கூட்டுத்தாபனத்திற்கு முடியாதிருந்தது.